**செ.வெ.ஆண்: 38** **நாள்:17.09.2019**

**கரூர் மாவட்டம்**

**தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் மனுக்கள் குழுவிற்கு பொதுமக்கள் பொது பிரச்சனைகள், குறைகள் குறித்து மனுக்களை வழங்கலாம் - சட்டப்பேரவை மனுக்கள் குழுவின் செயலர் திரு.கி.சீனிவாசன் அவர்கள் தகவல்**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 2018-2020 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழு கரூர் மாவட்டத்தில் விரைவில் கூடுவதென முடிவு செய்துள்ளது. இதனையொட்டி மேற்குறிப்பிட்ட மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தனிப்பட்ட நபரோ, சங்கங்களோ அல்லது நிறுவனங்களோ, தீர்க்கப்பட வேண்டிய பொது பிரச்சனைகள், குறைகள் குறித்து மனுக்களை (ஐந்து நகல்கள் தமிழில் மட்டும்) மனுதாரர் அல்லது மனுதாரர்கள் தேதியுடன் கையொப்பமிட்டு **தலைவர், மனுக்கள் குழு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, சென்னை - 600 009** என்ற முகவரிக்கு 18.10.2019ஆம் தேதிக்குள் அனுப்பலாம்.

மனுக்கள் கண்ணியமான வாக்கியத்தில் இருத்தல் வேண்டும். பல ஆண்டுகளாக அரசு அலுவலகங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பொதுப் பிரச்சனைகள் குறித்ததாக மனுக்கள் இருக்கலாம். மனுக்கள் ஒரேயொரு பிரச்சனையை உள்ளடக்கியதாகவும் ஒரேயொரு துறையைச் சார்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

மனுக்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் ஒன்றினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

ஆனால் மனுவில் உள்ள பொருள் தனிநபர் குறை, நீதிமன்றத்தின்முன் வழக்கிலுள்ள பொருள், வேலைவாய்ப்பு, முதியோர் ஓய்வூதியம், பட்டா மாற்றம் மற்றும் அரசு வழங்கும் இலவச உதவிகள் வேண்டுதல், வங்கிக் கடன் அல்லது தொழிற்கடன் வேண்டுதல், அரசுப்பணியில் மாற்றம் வேண்டுதல், இரசு அலுவலர்களின் குறைகளை வெளிப்படுத்துதல் போன்றவைகளாக இருத்தல் கூடாது.

சட்டமன்றப் பேரவை விதிகளின் வரம்பிற்குட்பட்ட மனுக்களை, மனுக்கள் குழு மாவட்டத்திற்கு வரும்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும், ஒரே மனுதாரர் பல மனுக்களை அனுப்பி இருந்தாலும், குழு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதும் ஒரு மனு மட்டுமே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். அவ்வமயம், மனுதாரர் முன்னிலையில், குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், மனுவில் உள்ள பொருள் குறித்த உண்மை நிலவரம் கேட்டறியப்படும். இது குறித்து, மனுதாரர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து குழு ஆய்வு செய்யும் நாளில் தகவல் தனியாக அனுப்பப்படும். 18.10.2019-க்குப் பின்னர் பெறப்படும் மனுக்கள் குழுவின் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படாது எனவும் சட்டமன்ற பேரவைச் செயலாளர் திரு.கி.சீனிவாசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

## PRESS RELEASE

The Committee on Petitions (2018-2020) of the Tamil Nadu Legislative Assembly will meet shortly in **Karur** District. In this connection, Individuals, Associations or Institutions in the above mentioned Districts, who desire to prefer petitions relating to redressal of public grievances may send petitions in Tamil **(5 copies in Tamil Nadu only)** duly signed by the petitioner / petitioners with date, addressed to the Chairman, Committee on Petitions, Tamil Nadu Legislative Assembly, Chennai – 600 009 on or before 18th October 2019.

Petitions should be in respectful and temperate language. Petitions may relate to public grievances which are pending disposal for many years with the Government Departments without being redressed**. A petition should contain only one grievance and it should relate to only one Department.**

Petitions must relate to a matter of general public importances.

Petitions should not relate to any of the following subjects:-

1. **Individual or private grievances;**
2. **Matters pending before any Court of Law, Tribunal, etc.,**
3. **Seeking employment opportunity, Old Age Pension, Assignment of pattas and Government free Schemes :**
4. **Bank loan or employment loan,**
5. **Request for transfer and redressal of grievances by Government servants:**

Tamil Nadu Legislative Assembly Secretary Thiru.K.Srinivasan has been instructed that The Committee on Petitions of the Tamil Nadu Legislative Assembly will consider such petitions, which are within the ambit of the Tamil Nadu Legislative Assembly Rules. **If a single petitioner sends more than one petition, Committee will consider only one petition which is most important among them**. When the Committee meets in the above District, factual position will also be ascertained from the officials concerned, who will participate during the deliberations in front of the petitioners. The Collectorate will send separate communication of the committee meeting directly to the petitioners concerned in due course**. Petition received after 19.10.2019 will not be included for the Committee's consideration**.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.